தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **homebushtsch@gmail.com**

ஆண்டிறுதிப் பரீட்சை 2025

ஆண்டு: 6 திகதி: 29.11.2025

நேரம்: 02:30 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி தேவரதி குலராஜா

உதவி ஆசிரியர் திருமதி ஜனனி எலியேசர்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	20	
வினா 2	10	
வினா 3	15	
வினா 4	20	
வினா 5	15	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

– BLANK PAGE –

வினா இல	1.1	புள்ளிகள்	12	பக்கம்	3

பின்வரும் சொற்கள் பெயராகவும் வினையாகவும் வர வாக்கியம் அமையுங்கள்.

அ) ஆடு

பெயர்:

_____

_____

வினை:

_____

_____

ஆ) மடி

பெயர்:

_____

_____

வினை:

_____

_____

இ) ஊர்

பெயர்:

_____

_____

வினை:

_____

_____

வினா இல	1.2	புள்ளிகள்	8	பக்கம்	3

பொருள் விளங்க வசனம் எழுதுங்கள். ஒவ்வொரு வசனமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருக்க வேண்டும்.

அ) வெள்ளம்:

_____

_____

ஆ) எழுதினார்:

_____

_____

இ) பறந்தன:

_____

_____

ஈ) தாய் நாடு:

_____

_____

வினா இல	2	புள்ளிகள்	10	பக்கம்	4

பின்வரும் பாடலை வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்க.

தோட்டம் வளர்ப்போம்



தோட்டம் போடலாம்
சின்ன சின்ன பாத்திகள் கட்டி
தோட்டம் வளர்ப்போம் நம் வீட்டில்
பச்சை பச்சை காய்கறிகள்
தினமும் பறித்தே சமைத்திடலாம்
மிச்சம் இருக்கும் காய்கறிகள்
அருகில் வசிக்கும் நண்பருக்கு
அன்பாய் கொடுத்து உதவிடலாம்

வீரிய உரங்கள் சேர்க்காமல்
இயற்கை உரங்களை சேர்த்து
விட்டால்
இன்னும் சிறப்பாய் பயிர் விளையும்
இப்படி விளையும் காய்கறியால்
வீட்டு செலவை சேமிக்கலாம்
பெற்றோரிடமும் நற்பெயர்
வாங்கிடலாம்
இன்றே இதனை தொடங்கிடுவீர்
அன்பு குட்டிச் செல்வங்களே!



1. மேலே கூறப்பட்ட பாடல் எதனைப் பற்றியது?

அ) கல்வியைப் பற்றியது
ஆ) வீட்டுத்தோட்டம் பற்றியது
இ) குடும்பத்தைப் பற்றியது
ஈ) தமிழைப் பற்றியது

2. கீழே கொடுக்கப்பட்ட விடைகளில் காய்கறிகள் அல்லாதது?

அ) பச்சை மிளகாய்
ஆ) கத்தரிக்காய்
இ) வெண்டிக்காய்
ஈ) மாம்பழம்

3. வீட்டுத்தோட்டத்தை எப்படி வளர்க்கலாம் என்று இப்பாடலில் கூறப்படுகிறது?

அ) பரந்த வெளிகளில்
ஆ) பாடசாலை-மைதானத்தில்
இ) சின்ன, சின்ன பாத்திகள் கட்டி
ஈ) பென்னம் பெரிய வயல் வெளிகளில்

4. கீழே கொடுக்கப்பட்ட விடைகளில் காய்கறிகள் ஆவன

அ) பூசணிக்காய்
ஆ) கத்தரிக்காய்
இ) வெண்டிக்காய்
ஈ) மேற் கூறிய எல்லாம்

5. வீட்டுத்தோட்டம் செய்வதால் அடையும் பயன்கள் எவை என, பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

அ) பச்சைக்காய் கறிகள் தினமும் பறித்து சமைத்திடலாம்.

ஆ) அருகில் இருக்கும் நண்பருக்கும் அன்பாய் கொடுத்து உதவிடலாம்.

இ) வீட்டுச் செலவை சேமித்து, பெற்றோரிடம் நற்பெயர் வாங்கலாம்.

ஈ) மேலே கூறிய அனைத்துப் பயன்களையும் அடையலாம்.

வினா இல	3.1	புள்ளிகள்	10	பக்கம்	6

பின்வரும் கதையை வாசித்து அதன் கீழே உள்ள வினாக்களுக்கு விடை தாருங்கள்.



பாடசாலை விடுமுறையில் ஒரு நாள் கபிலனின் வீட்டிற்கு அவனுடைய நண்பர்களான ரதனும் அகிலனும் விளையாட வந்தனர். அவர்கள் கபிலனின் வீட்டுத்தோட்டத்தில் பிறந்து ஒரு வாரமேயான ஆறு பூனைக்குட்டிகளைக் கண்டனர்.

அப்பூனைக்குட்டிகளைத் தங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்ல விரும்பினர். இருவரும் ஆளுக்கு இரண்டு பூனைக்குட்டிகளைத் தூக்கிக் கொண்டனர். ஆனால், கபிலன் அவர்களிடம் "நண்பர்களே! இந்தக் குட்டிகளைத் தாயிடமிருந்து பிரிக்க வேண்டாம். எம்மை யாராவது நம் பெற்றோரிடமிருந்து பிரித்தால் எப்படி இருக்கும் என்று எண்ணிப்பாருங்கள்" என்று கூறினான். நண்பர்கள் உடனேயே அந்தப் பூனைக்குட்டிகளை கீழே இறக்கி விட்டனர். அவை யாவும் ஓடிச்சென்று தம் தாயுடன் மகிழ்ச்சியோடு விளையாடின. அதனை கபிலனும் அவனது நண்பர்களும் பார்த்து மகிழ்ந்தனர்.

அ) கபிலனின் வீட்டுத்தோட்டத்தில் எத்தனை பூனைக்குட்டிகள் நின்றன?

_____

_____

ஆ) கபிலன் வீட்டிற்கு விளையாட வந்த நண்பர்கள் இருவரின் பெயர்களைத் தருக?

1. _____

2. _____

இ) பூனைக்குட்டிகள் பிறந்து எத்தனை கிழமைகள்?

_____

ஈ) கபிலன் நண்பர்களுக்குக் கூறிய அறிவுரை என்ன?

_____

_____

உ) பூனை எப்படிச் சத்தமிடும்?

_____

_____

வினா இல	3.2	புள்ளிகள்	5	பக்கம்	8

சரியான விடையைத் தெரிவு செய்க.

1. ஐயம் திரிபுறக்கற்றல் என்பதில் ஐயம் என்பது.

   அ) அச்சம் ஆ) ஐந்து இ) சந்தேகம் ஈ) பொய்மை

2. மாணவர்கள் இடைவேளை நேரத்தில் சண்டை பிடித்தனர்.
   சண்டை என்பதன் எதிர்ச்சொல்.

   அ) அமைதி ஆ) போர் நிறுத்தம் இ) ஆரவாரம் ஈ) சமாதானம்

3. பசுவின் இளமைப்பருவம் இப்படி அழைக்கப்படும்.

   அ) குருளை ஆ) பிள்ளை இ) குஞ்சு ஈ) கன்று

4. 'காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவுகொடுக்கும் நல்லபாட்டு' என்ற பாடலைப் பாடியவர்.

   அ) ஔவையார் ஆ) பாரதியார் இ) திருவள்ளுவர் ஈ) கம்பர்

5. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்கள்.

   அ) ஜல்லிக்கட்டு ஆ) கபடி இ) கிளித்தட்டு ஈ) மேற்கூறிய எல்லாம்

வினா இல	4	புள்ளிகள்	20	பக்கம்	9

உங்கள் பிறந்த தின விழாவிற்கு வரும்படி 50 சொற்களுக்குக் குறையாது அழைப்புக் கடிதம் ஒன்றை உமது நண்பருக்கு எழுதவும்.

வினா இல	5	புள்ளிகள்	15	பக்கம்	11

பின்வரும் தொடக்கப்பட்ட கதையை 50 சொற்களுக்கு குறையாது உங்கள் கற்பனையில் எழுதி முடியுங்கள்.

எமது வகுப்பு மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்லப்போவதாக எமது வகுப்பாசிரியர் அறிவித்த நாளில் இருந்து எனது நண்பர்கள் எல்லோரும் அந்த நாளை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தோம். கடல்வாழ் உயிரினங்கள் வாழும் காட்சிச்சாலைக்குச் செல்லப்போகிறோம்.

அந்த நாளும் வந்தது, காலை ஏழு மணிக்கு எமது வகுப்பாசிரியரும், இரண்டு உதவி ஆசிரியர்களும் பயணத்திற்கு ஆயத்தமாக பாடசாலை மைதானத்தில் கூடினோம். பெற்றோர் எம்மை வழியனுப்ப வந்திருந்தனர். நாங்கள் இருவர் இருவராக வரிசையில் நிற்க, பேருந்து வண்டியும் வந்தது.

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	13

பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை ஒன்றை எழுதுங்கள்.

1. தந்தையர் தினம்
2. விளையாட்டுக்களின் அவசியம்
3. கலாசார உணவு ஒன்றை தயாரிக்கும் முறை
4. இயற்கை அழிவும் அதனைத் தடுத்தலும்
5. அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகள்